# TAMIL DEPARTMENT

2016 – PARENTS’ WORKSHOP

“Speaking Tamil confidently and writing Tamil fluently”

# பட்டறையின் நோக்கம்

- மாணவர்களைத் தயக்கமின்றி தமிழில் பேச வைக்க சில உத்திகளை அடையாளம் காணுதல்
- மாணவர்களைத் தமிழில் தங்குத் தடையின்றி எழுத வைக்க சில உத்திகளை அடையாளம் காணுதல்

# Video Stimulus

- மாணவர்கள் தமிழ் குறும் படங்களைப் பார்த்து கதையின் முடிவை ஊகிப்பர்

- நடவடிக்கை

https://www.youtube.com/watch?v=y1kBtdmcXJ0&index=1&list=PLc2qWcCcXsJvGqkNbefQuopqr0cy7BHSO

# Jig Saw puzzle

- மாணவர்கள் வெட்ட பட்ட படங்களை நண்பனின் துணைக் குறிப்புகளைக் கொண்டு ஒன்று சேர்த்தல்.
- நடவடிக்கை


USE ME
BLOCK 238
Lift A

# Word Flash

- பட உரையாடலில் உள்ள முக்கிய சொற்களை மின் அட்டையில் எழுதுதல்
- இணை நிலையில் ஊகித்தல்
- நடவடிக்கை

மின்தூக்கித் தளம்

குப்பைத் தொட்டி

புகைப்பிடித்தல்

காற்பந்து விளையாடி

சந்தையிலிருந்து திரும்பி

தபால் பெட்டி

கடித உறை

பூனைக் குட்டிக்கு உணவு

# Cause and Effect

- மாணவர்கள் அவர்களின் கட்டுரைகளில், ஒவ்வொரு காரியத்திற்கும் உள்ள காரணத்தை இணைத்து அவர்களின் படைப்பை மேம்படுத்துதல்.

**கட்டுரை 1**

பள்ளி இடைவேளை மணி கோயில் மணியைப் போல் ஒலித்தது. மாணவர்கள் பள்ளி உணவகத்திற்கு விறு விறு என நடைபோட்டார்கள்.

மாலாவின் கையில் ஓர் ஒரு வெள்ளி நாணயம் இருந்தது. " நான் இன்று கோழிச் சோறு சாப்பிடப் போகிறேன்," என்று மாலா தன் மனதில் முடிவெடுத்தாள். ஆனால், மாலா முன்னால் இருந்த கல்லைப் பார்க்கவில்லை. அவள் அதன் மேல் கால் தடுக்கிக் கீழே விழுந்தாள்.

அவள் பின்னால் இருந்த வகுப்பு நண்பன் தீபன், அவளுக்கு உதவிக்கரம் நீட்டினான். "உனக்கு ஏதாவது ஆகிவிட்டதா?" என்று அவன் பதற்றத்துடன் கேட்டான். மாலா கண்ணீர் வடித்துக்கொண்டே தன்னுடைய ஒரு வெள்ளி நாணயம் முன்னால் இருந்த சாக்கடையினுள் உருண்டு போய் விழுந்துவிட்டது என்று சொன்னாள்.

உடனே தீபன் அந்தச் சாக்கடையை நோக்கிச் சென்றான். அதன் மேல் இருந்த இரும்புக் கம்பியைத் தூக்கப் பார்த்தான். ஆனால், அவனால் அதைத் தூக்க இயலவில்லை. அதைக் கண்ணுற்ற தீபனின் நண்பர்களான மாறனும் ராமுவும் அவனுக்கு உதவிக்கரம் நீட்டினர். அதைப் பார்த்த மற்ற மாணவர்கள் அவர்களைப் பாராட்டினர். பிறகு மாலா தன்னுடைய ஒரு வெள்ளி நாணயத்தை எடுத்துக்கொண்டு மூவரிடமும் நன்றி கூறினாள்.

பின்னர் அவர்கள் பள்ளி உணவகத்தை நோக்கி நடந்தார்கள். இனிமேல் நடக்கும்போது கவனமாக இருக்க வேண்டும் என்று மாலா உறுதி பூண்டாள்.

## கட்டுரை 2

மாறன் ஒரு சோம்பேரி. அவன் எப்போதும் கூட்டமான இடத்தலிருக்கும் நடை பாதையில் அந்தகர் போல நடிப்பான்.

அன்று சனிக்கிழமை, பேரங்காடி மிகவும் கூட்டமாக இருந்தது. மாறன் இதை கண்டு பக்கத்திலிருக்கும் நடைபாதையில் பாயை விரித்து அந்தகர் போல நடித்து, பிச்சை எடுத்தான். பல வழிபோக்கர்கள் அவனை பார்த்து பரிதாபப்பட்டார்கள். அவர்கள் அவனுக்கு குவளையில் பணம் போட்டார்கள்.

சிறிது நேரம் கழித்து பசி மாறனின் வயிற்றை கிள்ளியது. அவன் அந்தகர் போல நடிக்க பயன்படுத்திய அவனுடைய பாயையும், பணத்தையம் எடுத்தான். அவன் பாயை மடித்து ஒரு கழிவறைக்கு சென்றான். அவன் அவனனுடைய கறுப்பு கண்ணாடியை ஒரு பையில் போட்டு, ஓர் உணவகத்திற்குச் சென்றான்.

அவனுக்கு கை நிறைய பணம் கிடைத்ததால் அவன் மகிழ்ச்சியுடன் நிறைய உணவு வாங்கினான். இதை ஒரு காவலர் கண்கானித்தார். பிறகு மாறன் பாயுடன் அதே கழிவறைக்கு சென்று, கறுப்பு கண்ணாடியை பையிலிருந்து எடுத்து அணிந்தான்.

பிறகு அவன் அதே நடை பாதையில் பாதையில் பாயை விரித்து உட்கார்ந்தான். அவன் மீண்டும் அந்தகர் போல நடித்து பிச்சை எடுத்தான். அப்போது அந்த காவலர் இதை கண்டார்.

திடீரென்று அந்த காவலருக்கு யோசனை தோன்றியது. அவர், 'பாருங்கள்! சூரியா அங்கே இருக்கிறார்! என்று போலி உற்சாகத்துடன் கத்தினார், காவலர். மாறன் சூரியாவின் ரசிகர்! அதனால் அவன் கண்ணாடியை வேகமாக அகற்றினான். அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். ஆனால் அவன் சூரியாவை பார்க்கவில்லை.

இதை பார்த்த வழிபோக்கர்கள், மாறன் அவர்களை ஏமாற்றுகிறான் என்பதை உணர்ந்தார்கள். மாறனின் குவளையை எடுத்தார்கள். மேலும் அவளை வழிபோக்கர்கள் காது பிளக்கும் படி திட்டினார்கள். மாறன் வேட்கத்தில் தலை குனிந்தான். அவன் செய்த தவற்றிற்கு அபராதம் செலுத்தினான்.

அன்றிலிருந்து மாறன் அவனுடைய சோம்பேறித்தனத்தை விரட்டி அடித்தான்.

# கேள்வி பதில் நேரம்

# நன்றி